# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE, KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 171/2024 (156/2020 ) |
| Deposition of witness for | Prosecution : LW17– PW6 |
| | Defence : |
| | Court : |
| Name : சந்திரசேகரன் | Father's Name: பாலகிருஷ்ணன் |
| | Husband Name: |
| Village/Town : | Taluk : |
| Mail ID: | Calling : காவல் துணை கண்காணிப்பாளர் |
| | Age : 59 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.03.2026

**எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317ன் கீழ் மனுதாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்ட நில அபகரிப்பு பிரிவில் (DCB–II)–ல் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.08.2017ம் தேதியன்று கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது நிலையப் பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் திரு. தமிழரசு என்பவருக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு சென்று சிகிச்சையில் இருந்த ரங்கநாதன் சுயநினைவு இல்லாததால் அவருடைய மகன் திரு. அண்ணாமலை என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் சேர்ந்து நிலைய குற்ற எண். 367/2017, ச/பி. 297, 337 இ.த.சவின்படி வழக்கு பதிவு செய்துள்ளார். அதன் பின்னர் 07.08.2017ம் தேதி காலை 07.00 மணிக்கு

சம்பவயிடமான திருவண்ணாமலை – திண்டிவனம் மெயின்ரோடு மலப்பாம்பாடி கூட்டுரோடு எழில் நகர் பாலத்திடம் சென்று சாட்சிகள் பழனிவேல், ஆனந்தன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் மாதிரிவரைபடம் மற்றும் பார்வைமகசர் தாயர் செய்துள்ளார். பின்னர் சம்பவயிட சாட்சிகளான அண்ணாமலை, லட்சுமி, காசி, ராம்கி, சிவராஜ், பழனிவேல், ஆனந்தன் ஆகியோரை ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இட சாட்சிகளின் விசாரணை மூலமும் உதவி ஆய்வாளரின் விசாரணை மூலம் சம்பவம் உண்மையென தெரியவரவே இவ்வழக்கின் எதிரி ராஜீவ்குமார், த/பெ. ரகோத்தமன் என்பவரை அன்றைய தினம் மாலை 16.30 மணிக்கு கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க இருநபர் பிணையம் பெற்று பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 25 BB 0004 என்ற ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் 12.08.2017ம் தேதி இவ்விபத்தில் காயம்பட்ட ரங்கநாதன் திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை முடித்து வீட்டிற்கு வந்து 26.08.2017ம் தேதியன்று மாலை 03.00 மணியளவில் இறந்துவிட்டதாக அவருடைய மகன் அண்ணாமலை என்பவர்நிலையம் ஆஜராகி கொடுத்த தகவலைப் பெற்று இந்த ரங்கநாதனின் வீட்டிற்கு சென்று பிரேதத்தை கைப்பற்றி திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் ஒப்படைத்து பின்னர் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 279, 304(A) இ.த.ச.வாக சட்டப்பிரிவினை மாற்றம் செய்துள்ளார். பின்னர் 27.08.2017ம் தேதி காலை 10.30 மணிக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கிடம் சென்று விபத்தில் இறந்துபோன ரங்கநாதன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டுள்ளார். பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான அண்ணாமலை,

ஏழுமலை, சிவலிங்கம், ஆறுமுகம், ராமசாமி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்னர் பிரேதத்தை பிரேதபரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்து தலைமைக் காவலர் திரு. செல்வம் என்பவரிடம் ஒப்படைத்து பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார். அதன் பின்னர் பிரேதபரிசோதனை முடித்து பிரேதத்தை அவரது குடும்பத்தாரிடம் ஒப்படைத்துள்ளார். பின்னர், இவ்வழக்கில் காயம்பட்ட ரங்கநாதன் என்பவருக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவர். திரு.நாகராஜன் என்பவரை விசாரணை செய்து விபத்துப்பதிவேட்டு பெற்று வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்னர் இவ்வழக்கை எனது பார்வைக்கு வைத்திருந்ததை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் அண்ணாமலை, லட்சுமி, காசி, ராம்கி, சிவராஜ், பழனிவேல், ஆனந்தன், ஏழுமலை, சிவலிங்கம், ஆறுமுகம், ராமசாமி ஆகியோரை விசாரணை செய்தபோது மேற்படி சாட்சிகள் அனைவரும் உதவி ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடம் கூறியதால் மறுவாக்குமூலம் ஏதும் பதிவுசெய்யவில்லை. பின்னர் 15.09.2017ம் தேதியன்று வழக்கில் இறந்துபோன ரங்கநாதன் என்பவருக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு. கமலக்கண்ணன் என்பவரை விசாரணை செய்து பிரேதபரிசோதனை அறிக்கைப் பெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.9** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. பின்னர் பிரேத பரிசோதனை அலுவலக்கு சென்றுவந்த தலைமைக் காவலர் செல்வம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 25 BB 0004 என்ற ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. ராம்குமார் என்பவரை விசாரணை செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம்

பதிவுசெய்தேன். இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக 15.09.2017ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**குறுக்குவிசாரணை**

நான் இவ்வழக்கின் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பின்னர் வழக்கு கோப்புகள் அனைத்தையும் நான் பரிசீலனை செய்தேனா என்றால் செய்தேன். மேற்படி புகார்தாரர் அவருடைய புகார் மனுவில் மேற்படி புகாரில் சொல்லப்பட்டுள்ள TN 25 BB 0004 என்ற ராயல் என்பீல்டு மோட்டார் சைக்கிளின் பதிவெண் யார் சொல்லி அவருக்கு தெரியவந்தது என்று புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சொல்லப்படவில்லை ஆனால் வாக்குமூலத்தில் மேற்படி புகார்தாரர் அண்ணாமலை மோதிய நபரை விசாரித்து தெரிந்துக்கொண்டதாக சொல்லியுள்ளார். மேற்படி புகார்தாரர் அண்ணாமல யாரை விசாரணை செய்து அந்த பதிவு எண் கொண்ட வாகனத்தை தெரிந்துக்கொண்டார் என்று தன்னுடைய வாக்குமூலத்திலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பவத்தை யாரும் பார்த்ததாக புகார்தாரர் புகாரிலும், வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் அனைவருமே எதிரியானவர் வேகமாக ஓட்டியதாகவோ எந்தவொரு வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. 12.08.2017ம் தேதியில் இருந்து இறந்ததேதியனா 26.08.2017ம் தேதிவரை எந்த மருத்துவரிடம் சிகிச்சைப் பெற்றார் என்று என்னுடைய புலன் விசாரணையில் சொல்லவில்லை என்றால் மேற்படி இறந்த ரங்கநாதனின் மகனின் வாக்குமூலத்தில் நடக்கமுடியாமல் இருந்த அவரது தந்தை ரங்கநாதன் இறந்துவிட்டார் என்று சொல்லியுள்ளார் ஆனால் மருத்துவசிகிச்சைப் பெற்றதாக

எந்தவொரு வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றால் சரிதான். எதிரியின் அங்க அடையாளங்கள் ஏதும் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்தையும் எதிரியையும் கண்ணுற்றதாக சொல்லப்படும் சாட்சிகளிடம் எதிரியை வைத்து அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை அடையாளம் காட்டப்படவில்லை என்றால் சரிதான் பெயர், விலாசம் சாட்சிகள் கூறியதால் அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை. மேற்படி எதிரியானவர் ஏற்கனவே எனக்கு பரீட்சயமான பெயர், விலாசம் தெரிந்த நபர் என்று யாரும் கண்ணுற்ற சாட்சிகள் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி எதிரியை விபத்து நடந்த மறுநாள் கைது செய்தோம் என்றால் சரிதான். மேற்படி எதிரிக்கும் விபத்து நடந்த போது விபத்தில் லேசான காயம் ஏற்பட்டது என்று காசி அவருடைய வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் ஆனால் எதிரியை கைது செய்த போது அந்த கைது நமுனாவில் மேற்படி லேசான காயம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் மேற்படி உதவி ஆய்வாளர் குறிப்பிடவில்லை என்பது சரியல்ல. மேற்படி எதிரிக்கு உண்மையிலேயே சம்பவத்தில் காயம் ஏற்பட்டிருந்தால் மேற்படி கைது நமுனாவில் குறிப்பிட்டிருப்போம் என்றாலும், அவ்வாறு குறிப்பிடாததால் விபத்தை எதிரி ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. திருவண்ணாமலை – திண்டிவனம் சாலை அதிகமான போக்குவரத்துள்ள சாலை என்றால் சரிதான். மேற்படி இறந்துபோன ரங்கநாதன் என்பவர் காதுகேளாத, சற்று மனநிலை பாதிக்கப்பட்ட நபர் என்று புகாரிலேயே ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதி என்றால் சரிதான். எனவே, மேற்படி இறந்துபோன ரங்கநாதனை ஏதோ ஒரு வாகனம் விபத்து ஏற்படுத்திவிட்டு சென்றுவிட்டது விபத்து இழப்பீடு பெறவேண்டும் என்பதால் எதிரியின் வாகனத்தை வைத்து ஒரு பொய்யான புகார்மனுவைப் பெற்று சரிவர விசாரணை செய்யாமலும், சம்பவயிடம் செல்லாமலும், அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றால்

**சரியல்ல. உதவி ஆய்வாளர் பிரேதவிசாரணை செய்ய அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவொரு சம்மந்தமும் இல்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/-M.C.Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்